## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 113/2012

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணய்யா மந்தடி | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : கார்த்திகேயபுரம் மோட்டூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

25.06.2025

<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

8. நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞர் ஆணையர், சர்வேயர் வந்து வழக்கு சொத்தை அளவீடு செய்தார்கள் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சொத்து விபரத்தில் புல எண்.215/8, 215/9 என இரண்டு சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் ஆமாம். பிராதில் புல எண்.215/8ன் நான்கு பக்க எல்லைகளாக கிழக்கே புல எண்.215/8ல் உள்ள சாலை, மேற்கே காளிதாஸ் மகன் குமரேசன் என்பவரது புல எண்.215/8ல் உள்ள நிலமும், வடக்கே புல எண்.7A, B, தெற்கில் வாதியின் நிலம் என காட்டப்பட்டுள்ளது என்றால் என் நிலத்திற்கு கிழக்கே தென்வடல் சாலை, வடக்கே கிழமேல் 20 அடி சாலை, மேற்கே நல்லமந்திரி நிலம், தெற்கே நரசிம்மன் வீடு என்று பிராதில் சொல்லியுள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் தற்போது சொல்லும் நான்கு எல்லைகள் எனது பிராதில் சொல்லப்படவில்லை என்றாலும் சரியல்ல.

9. எனது பிராதில் புல எண்.215/9, புதிய புல எண்.215/9Aன் நான்கு எல்லைகளாக கிழக்கே புல எண்.218ல் உள்ள சாலை மேற்கே ரங்கமந்தடியின் புல எண்.215/10A, வடக்கே வாதியின் புல எண்.215/8, தெற்கே வாதியின் புல

எண்.215/9B ல் உள்ள சாலை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறு. மேற்கே ரங்கமந்தடி நிலம், கிழக்கே தென்வடல் 20 அடி சாலை, வடக்கே கிழமேல் 30 அடி சாலை, தெற்கே நரசிம்ம மந்தடி வீடு உள்ளது. நான் தற்போது சொல்லும் நான்கு எல்லைகள் தவறானது என்றாலும் அது எனது பிராதில் சொல்லப்படவில்லை என்றாலும் சரியல்ல.

10. ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் வழக்கு சொத்தின் நான்குபுற எல்லைகள் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் வழக்கு சொத்தின் நான்கு எல்லைகளாக பக்கம் 3 ல் புல எண்.215/9A, 215/9B, நிலத்திற்கான செக்பந்தி என குறிப்பிட்டுள்ள விவரம் சரியானதா என்றால் தவறானது ஆகும். பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தையும் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் அளந்தார்கள் என்றால் ஆமாம். நில அளவையர் என் சொத்தை தனியாகவும், பிரதிவாதி சொத்தை தனியாகவும் அளந்து காண்பித்த பின்பும் நான் பிரதிவாதிக்கு அங்கு இடமில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் அது என் நிலம் தான். வீட்டுமனை இல்லை.

11. நான் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இன்றுவரை அது மனை எண்134 ல் வீட்டு மனையாகதான் உள்ளது என்றால் அங்கு வீட்டு மனையே இல்லை. பிரதிவாதியின் வீட்டு மனையை அபகரிக்க வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பொய்யான வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் பிரதிவாதியின் வழக்கு தீர்ப்பு செய்ய வேண்டியது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)